புதுச்சேரி அரசு

துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2021** **21 ஜனவரி 2023**

# பத்திரிகை செய்தி

பட்டைய கணக்கியல் மாணவர்களின் மெகா மாநாடு புதுச்சேரி செண்பகா ஓட்டல் மற்றும் கலாச்சார மையத்தில் இன்று(21-01-2023) நடைபெற்றது. அதன் நிறைவு விழாவில் மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றினார். நிகழ்ச்சியில் பேசிய துணைநிலை ஆளுநர்,

- பட்டயக் கணக்காளர்கள் எல்லோருடைய வாழ்க்கையிலும் மிக முக்கியமான பங்கு வைக்கிறார்கள். அந்த வகையில் இந்த மாநாடு இன்றைய சூழ்நிலையில் அவசியமான ஒன்று.
- கணக்கிடுவது, அளந்து செய்வது, சரியாக செலவிடுவது இவையெல்லாம் நமது தமிழ் மரபில், இந்திய மரபில் ஏற்கனவே சொல்லப்பட்டு இருக்கிறது. இப்போது அது முறைப்படுத்தப்பட்டு பாடமாக வைக்கப்பட்டிருக்கிறது.
- பெருந்தலைவர் காமராஜர் வரி பற்றி ஒருமுறை குறிப்பிட்டிருந்தார். வரி என்பது நெல் மணியை சேற்றில் போடுவது மாதிரி. நெல்மணியை சேர்த்து போட்டால் அது வளர்ந்து பயிராகி பல நெல்மணிகளை பலன் தரும். அதற்கான வழிகளைதான் பட்டையைக் கணக்காளர்கள் செய்து கொண்டு இருக்கிறார்கள். வரி செலுத்தவில்லை என்றால் நாடு முன்னேறாது. கணக்காளர்கள் அரசுக்கும் மக்களுக்கும் கணக்கு வழக்கில் ஒரு பாலமாக செயல்படுகிறார்கள். கணக்காளர்கள் இல்லை என்றால் இன்று எதுவும் செய்ய முடியாது என்ற சூழ்நிலை உருவாகிறது. இது ஆரோக்கியமான ஒன்றுதான்.
- பாரதப் பிரதமர் ஒரு முறை குறிப்பிட்டார். இந்தியாவில் இருந்து மூன்று கோடி நபர்கள் வெளிநாடு போகிறார்கள். அதில் ஒரு கோடி நபர்கள் மட்டுமே வரியை செலுத்துகிறார்கள். பட்டைய கணக்காளர்கள் இதை சரியாக மக்களுக்கு எடுத்துச் சொல்லி வரி எப்படி மக்களுக்கு பயன்பெறுகிறது என்பதையும் எடுத்துச் சொல்லி நல்ல பாலமாக செயலாற்றுகிறார்கள். அதற்காக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். பல நிறுவனங்கள் கணக்காளர்களின் வழிகாட்டுதலால் சரியான பாதையில் சென்று கொண்டிருக்கிறது.
- நாட்டுப்பற்று மிக முக்கியம். நமது வாடிக்கையாளர்களுக்கும் உண்மையாக இருக்க வேண்டும். அதே சமயம் நாற்றுப்பற்றுடன் செயல்பட வேண்டும். அதை சமமாக அணுக வேண்டும். சிரமமாக இருந்தாலும் அதை செய்ய வேண்டும்.
- கணக்காளர்கள் மகிழ்ச்சியாக இருங்கள். எதற்காகவும் மகிழ்ச்சி தொலைத்து விடாதீர்கள். அனைவரும் யோகா பயிற்சி செய்யுங்கள். ஆண்டுதோறும் உடலை பரிசோதனை செய்து கொள்ளுங்கள். உடல் நலத்தை பாதுகாத்துக் கொள்ளுங்கள். நாட்டுக்கு உதவி செய்யுங்கள்.

என்ற தெரிவித்தார்.